Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணீ சகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறில்.



| | | |
|---|---|---|
| வெண்டாமரை க. | 1913-ம் ஆ நவம்பர் மீ | இதழ் கக. |





பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.



| | |
|---|---|
| வருஷ சந்தா ரூ 1 | வெளிநாட்டுக்கு ரூ 2 |
| தபாற்கூலி அணா 4 | தனி சஞ்சிகை அணா 2 |

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

2142

## உள்ளுறை.

பக்கம்

பாலசிக்ஷை :—ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 1

புதுவையில் கக்கவுஸ் (மலவறை): — புதுவைநகர்வாசி. ... 5

ரமணி (ஓர் காதற் கதை): — ஸ்ரீமத் சு. அ. சுப்பராயப்பிள்ளை, புதுவை. ... ... ... ... 8

ஈகை : — ஸ்ரீமத் N. சொக்கலிங்கசெட்டியார், பரங்கிப் பேட்டை ... ... ... ... ... 12

புராதன நகராமாகிய தக்ஷசிலம்:— ஸ்ரீமத் ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், முத்தியாலுப்பேட்டை. ... ... ... 15

மணிமேகலை : — பத்திராதிபர். ... ... ... ... 17

மங்கலம் :—வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பைய சுவாமிகள். ... ... ... ... 21

நியாயமாலா:—ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சீபுரம். ... ... ... ... ... ... 22

சுஜன சம்வாதம் : — ஸ்ரீமத் ஆ. செங்கல்வராயமுதலியார், காஞ்சிபுரம். ... ... ... ... ... 23

வைத்தியக் குறிப்பு: — ஸ்ரீமத் V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், Ex. முனிசிப்பல் கௌன்சிலர் பழநிஸ்தலம். ... ... ... ... ... 25

சமாசாரம் : — ... ... ... ... ... 25

## இந்தியாவின் தத்துவஞானம்.

பிரம்மஸ்ரீ ஜீ. ஸீ. ஷட்டெர்ஜீ அவர்களால் ப்ருய்க்ஸேல் நகரத்தில் 1898-ம் ஆண்டில் பிராஞ்சுப்பாஷையில் உபந்யஸிக்கப் பட்டது. புதுவை பிரமக்ஞானசபை அங்கத்தினரும் பொதுவேலைகள் ஓவர்சியருமாகிய வே. கு. அநந்தநாயக நாயகரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

டபிள் க்ரவன் சயிஜில் (1 இ 16) 12½ பாரம் (200 பக்கம்) கொண்ட புத்தகம் 1 இ விலை அண 6. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதி வி பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், "ஸ்ரீக்ருஷ்ண" வாசகசாலை.

சி காளத்தீசர் கோயில் வீதி, புதுச்சேரி.

2̶4̶3̶ 225

உ

ஸ்ரீவாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆ நவம்பர் மீ [இதழ் கக.

## இலௌகிகப் பகுதி.

### பாலசிக்ஷை.

எ-வது அத்தியாயம்.

ரு-வது வயது

(தொடர்ச்சி.)

சன்மார்க்கப் பயிற்சி.

பகுத்தறிவு இன்னும் பூர்த்தியடையாத இவ்வயது இளங்குழந்தைகட்குச் சன்மார்க்கநெறியை நியாயப்பிரமாணமாகப் போதிக்க முயல்வது முற்றுந் தவறு.

விஷயத்தைப் பரீக்ஷித்து நியாயம் கண்டறியும் சக்தி குழந்தைகளிடம் இருக்குமாயின் அவைகட்குக் கல்வி பயிற்றவேண்டிய அவசாமேயிராது. ஏனெனின், கற்பதெல்லாம் நியாயசக்தியை விருத்திசெய்வதற்கன்றோ?

"அறஞ்செயவிரும்பு" "ஆறுவதுசினம்" இத்தியாதி நீதிகளைச் சிறுகுழந்தைகட்கு நியாயப்பிரமாணமாகவும் பிரசங்கமுகமாகவும் கற்பிக்க முயல்வது செவிடன்காதில் சங்கூதுவதற்கொக்கும்.

ஆகலின் சாத்திரமுறையாகவும் சூத்திரமுறையாகவும் சன்மார்க்கநெறியைப் போதிப்பதைத் தவிர்த்து, குழந்தைகட்கு இது தக்கது இது

தகவிலது என்பதைக் கதாரூபமாக விளக்கிக்காட்டி அக்கதைகளிலுள்ள நீதிகளைத் தாமே யூகித்துணருமாறு செய்துவரல்வேண்டும்.

கதைகள்மீது பிள்ளைகட்கு அதிக விருப்பமுண்டென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயம். சொல்லுபவர் அலுத்துப்போவார்களேயன்றிக் கதைகேட்கும் பிள்ளைகள் சலிப்படைகிறதில்லை. இயல்பாகவுள்ள இவ்விருப்பத்தைச் சன்மார்க்கப் பயிற்சிக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுதல் ஒரு நல்ல உபாயமாகும்.

ஆகவே நன்மைசெய்வதினாலும் தீங்கிழைப்பதினாலும் விளையும் இதாகிதங்களை நன்கு விளக்கிக்காட்டும் சிறுகதைகளைக் குழந்தைகட்கு உரைத்து, அவைகளை நன்கு உணரும்படி செய்தலே மூன்று நான்கு வயதுக் குழந்தைகளை நல்லொழுக்கத்திற் பயிற்றுமுறை.

குழந்தைகட்கும் அறிவில் முதிர்ச்சியடையாத பாமர ஜனங்களுக்கும் நன்னீதிகளைக் கற்பிப்பதற்கன்றோ ஆன்றோர் அவைகளையெல்லாம் கதைகளாகவும் புராணங்களாகவும் திரட்டிவைத்திருக்கின்றனர்.

மிரட்டியும் வீண்பயங் காட்டியும் சன்மார்க்கநெறியைக் குழந்தைகட்குப் போதிக்கமுயல்வதனால் பயனில்லை. தாய் குழந்தையைப்பார்த்து, " இது செய்யாதே, செய்தால் சாமி அடிக்கும், பேய்கடிக்கும் " என்று மிரட்டி நல்லொழுக்கங் கற்பிக்க முயல்வதனால் என்ன நேரிடுகிறதென்பதைச் சற்று விசாரிப்பாம்.

எச்சரிக்கையை மீறித் தவறிழைக்கும்போது, சாமியும் அடிக்கவில்லை பேயும் கடிக்கவில்லை யென்பதை குழந்தை அநுபவத்தால் அறிந்துகொள்ளுகின்றது. இதனால் தாய் மிரட்டியதெல்லாம் வீணுக்கென்றும், தான் செய்ததில் தவறொன்றுமில்லையென்றும் அதன் மனதில் ஓரெண்ணம் தோன்றுவதுடன் தாயின் வார்த்தையில் நம்பிக்கையின்மையும் ஏற்படுகின்றது.

பாவபுண்ணியத்தைப் பகுத்துணர்ந்தும் கடவுளுக்கு அஞ்சியும் ஒழுகும் அறிவு, இவ்வயதுச் சிறுகுழந்தைகட்கு இன்னுமுண்டாகாததினால், விலக்கியதை விடுத்தற்கும் விதித்ததைச் செய்தற்கும் குழந்தைகளைப் பயிற்றுதற்கு வேறு உபாயங்களைக் கைக்கொள்ளவேண்டும். அவைகளில் குழந்தைக்குப் பெற்றோர்மாட்டுள்ள அன்பு, நற்சேர்க்கை, நற்காட்சி, நற்பழக்கம் முக்கியமானவைகளாகும்.

அன்பு. — முன்னறி தெய்வமாகிய அன்னை, குழந்தையை அன்பினால் தன் வசப்படுத்திக்கொள்ளின் ஆகாததொன்றில்லை. குழந்தையை

நோக்கி "நீ இது செய்தால் எனக்குப் பிரியமாயிருக்கும்" என்னும் இம்மாத்திரமே அது நல்வழி நடப்பதற்குப் போதுமான உற்சாகத்தைத் தருவதாகும். பகுத்தறியும் சக்தியில்லாத குழந்தைகட்கு, தாய் சொல்வதைச் செய்வதே நன்மை அதை மறுப்பதே தீமையென்னும் ஒருணர்வு மனத்திற்றோன்றி, அவ்வுணர்வே நல்வழி காட்டுவதற்கு ஓர் தீபம்போல விளங்கும்.

இம்முறையின் நற்பயனைத்தேரா அறிவிலிகள் "அடியாத பிள்ளை படியாது" "அடியுதவுமாபோல் அண்ணன் தம்பிகள் உதவுவாரல்லர்" இவைபோன்ற பேதைமையான பழமொழிகளைப் பேணினராய்க் குழந்தைகளை வலிமையிலும் கொடுமையிலும் வளர்த்தலே நன்றென்றெண்ணி அவ்வாறே செய்துவருகின்றனர். அந்தோ! அறிவற்ற மிருகங்கள்கூடத் தத்தங் குழவிகளை எவ்வளவோ அன்புடன் போற்றி வளர்க்கின்றன. அன்றியும் கொடுமையிலும் அச்சத்திலும் வளர்க்கப்படுகின்ற குழந்தைகள், அடிமைகளைப்போல் கோழை நெஞ்சமுடையவர்களாயும் உற்சாகமும் வீரமுமற்றவர்களாயும் இருப்பார்களேயன்றி, நல்லொழுக்கத்திற் சிறந்தவர்களாகமாட்டார்கள்.

நற்சேர்க்கை. — நல்வழியடைதற்கும் தீவழிப்படுதற்கும் சகவாசம் முக்கிய காரணமாகும்.

ஒருவன் யாரிடத்தில் சகவாசஞ்செய்கிறானென்று தெரிந்தால் அவன் இத்திறத்தானென்று யூகித்தறியக்கூடுமென மூதுரையும் உண்டு. அறிவின் முதிர்ந்தவர்களிடத்தும் சகவாசத்தின் வன்மை இஃதாயின், மூன்று நான்கு வயதுக் குழந்தைகளிடத்தில் அதனாலுண்டாகும் நன்மை தீமைகளை எடுத்துரைக்கவும் வேண்டுமோ?

நல்லது செய்தற்கும் அல்லது தவிர்த்தற்கும் போதிய மனத்திடன் சிறுகுழந்தைகளிடம் இருப்பதரிது. பகுத்தறிவும் குன்றி நிற்கின்றது. ஆகவே ஒருவர் செய்வதைப் பார்த்து, அதுபோலத் தாமும் செய்வது அவைகளுக்கு இயல்பாகவும் சுலபமாகவும் இருக்கின்றது.

இவ்வயதினின்றே நற்குண நற்செய்கைகளுள்ள தாதியர், தோழர், குற்றேவலர்களோடு சேர்ப்பித்தும், துர்ச்சன சகவாசத்தை யகற்றியும் குழந்தைகளை வளர்த்துவரவேண்டும். இவ்விளங் குழவிகட்கு எங்ஙனம் சேர்க்கையினால் நன்மை தீமைகள் ஏற்படுமென்றெண்ணுதல் தவறு. இவர்கள் மெல்லிய இருதயத்தில் சேர்க்கைச் செயல்கள் வெகு துரிதத்தில் படிகின்றன. இனத்தியல்பாம் அறிவு என்பது முக்கியமாய்ச் சிறுகுழந்தைகளிடத்திலேயே உண்மையாகின்றது.

**நற்காட்சி.** — பார்த்ததைச் செய்தல் குழந்தைகளின் இயல்பு.

பொம்மையிடத்தில் சிறுகுழந்தை, தாய் தனக்குச் செய்வதையெல்லாம் அதாவது நீராட்டல், சோறூட்டல், கண்வளரச்செய்தல் முதலிய வைகளையெல்லாம் எவ்வளவு செம்மையாய்ச் செய்து தீர்க்கிறதென்பதை நாம் நாள்தோறும் கண்கூடாகக் கண்டறிகிறோம். இதனால் கண்டவண்ணம் செய்தல் குழந்தைகளின் சுபாவமென்பது அங்கையி னெல்லியங் கனிபோல் நன்குவிளங்குகின்றது.

ஆகவே குழந்தைகளை நன்னெறியிற் பயிற்றுவதற்கு அவர்கள் கண்ணெதிரில் தீச்செயல்களொன்றும் நேராதபடியும் நல்லொழுக்கமும் நன்னடையும் அவர்கட்கு நீங்காக் காட்சியாயிருக்கும்படியும் நாம் அவர்களைப் பாதுகாத்துவருதல் நமது முக்கிய கடமையாகின்றது.

சிறுகுழந்தைதானே, இதனெதிரில் நாம் எப்படி யிருந்தால்தானென்ன, எதுசெய்தால்தான் என்ன என்னும் தப்பெண்ணத்தால் பெற்றோரு மற்றோரும் அதற்கு எண்ணில தீங்குகள் செய்கின்றனர்.

**நற்பழக்கம்.** — நல்லதைச் செய்தற்கும் அல்லதை ஒழித்தற்கும் குழந்தைகளை அப்பியாசப்படுத்தலே நற்பழக்கமெனப்படும். நற்பழக்கம் பாலசிக்ஷையில் முக்கியமான பாகமாகும்.

பழக்கத்தினால் செய்தற்கரிய காரியங்களையெல்லாம் வெகு எளிதில் செய்யமுடியும்.

பொதுவாக, தீமையை விலக்கி நன்மையைச் செய்தல் கஷ்டமாகத் தோன்றுமென்பது அனுபவ உறுதி. ஆனால் பழக்கத்தினால் அக்கஷ்டம் சிறுகச் சிறுகக் குறைந்து பின்னர் முற்றும் நீங்கும்.

ஆதியினின்றே குழந்தைகள் நன்மையை விரும்பும்படியும் தீமையை வெறுக்கும்படியும் செய்து, அவர்கள் கஷ்டமொன்றின்றி இயல்பாகவே நல்லொழுக்கநெறியில் நிற்கும்படி பழக்குதலே சன்மார்க்கப் பயிற்சியின் முக்கிய கருத்தென்க.

இனி இவ் வயதுக் குழந்தைகளிடம் நற்குண நற்செய்கைகளில் எவைகளை விசேஷமாக முன்னர் விருத்திசெய்தல் வேண்டுமென்பதை விசாரிப்பாம்.

( இன்னும் வரும். )

த. பு. அம்மணியம்மாள்.

247 229



## புதுவையில் கக்கவுஸ். (மலவறை)

சென்றமாதம் கலைமகள் பத்திரிகையில் பரதேசவாசியென்று கையொப்பமிட்ட ஜனோபகாரி யொருவர் இது விஷயமாகப் பெரிதும் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

சுகாதாரத்திற்கும் பொதுஜன சௌக்கியத்திற்கும் புதுவையில் கக்கவுஸ் கஷ்டம் நீங்கா இடையூறாக நிற்கின்றது. அது முற்றும் நிவிர்த்தியாகும்வரையில் மீண்டுமீண்டும் அதைக்குறித்து எத்தனைமுறை யெடுத்துக் கூறினும் கூறியது கூறல் என்னும் குற்றத்தின்பாற்படாது.

நம் புதுவைமாநகர் செல்வத்திலும், நாகரிகத்திலும், அழகிலும், சுகாதாரநிலையிலும் தென்னிந்தியா முழுவதும் பிரசித்திபெற்று விளங்குகின்றதென்பதை அறியாதாரில்லை.

சிறிதுகாலத்திற்கு முன் ஜலகஷ்டமாத்திரம் சிறிதிருந்தது. இக் குறை யிப்போது பிராஞ்சு துரைத்தனத்தார் கருணையினாலும், நமது மகாஜன பிரதிநிதிகள் நன்முயற்சியினாலும் முற்றும் நிவிர்த்தியாகி ஒவ்வொரு வீட்டிலும் வீதிகளில் பற்பலவிடங்களிலும் ஏராளமான சுத்த ஜலம் கிடைக்கக்கூடிய சௌகரியம் ஏற்பட்டுவிட்டது.

ஆனால் வீதிகளைச் சுத்தப்படுத்துவதிலும் மலஜலாதிகளை வசிக்குமிடங்களினின்று அப்புறப்படுத்துவதிலும் ஏற்பட்டுள்ள குறை வரவா வளர்ந்தேவருகின்றது.

சுசிகரக் குறைவு பொதுஜன சுகாதாரத்திற்கு முற்றும் கேடுள்ளதென்பதையும் அதன்மீது துரைத்தனத்தாருக்கு முழு நோக்கமிருத்தலவசரமென்பதையும் விரித்துச் சொல்லவும் வேண்டுமோ?

இரண்டோராண்டுக்கு முன் துரைத்தனத்தாரால் எடுக்கப்பட்டுள்ள ஜனக் கணக்குப்படி நம் புதுவைநகரில் மாத்திரம் 47,539 ஜனங்கள் வசிக்கின்றனர். இவர்களுடன் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கும் பிரயாணிகளின் தொகையைச் சேர்க்கின், புதுவை பிரதிதினமும் 50,000 ஜனங்கட்கு வாசஸ்தலமாகிறதென்றேற்படுகிறது. அன்றியும் அது மற்றப் பட்டணங்களைப்போல இடைவெளியும் தோட்டங்களும் நிறைந்துள்ளதன்று. ஒன்றோடொன்று நெருங்கித் திரண்ட வீடுகளுள்ளது.

ஆகவே இந்த 50,000 ஜனங்களில் பெரும்பான்மையோர் மலஜலாதிகளைத் தாங்கள் வசிக்கும் வீடுகளிலேயே கழிக்கக் கடன்பட்டவர்களாகின்றனர். அவைகளை வாசஸ்தலத்தினின்று பிரதிதினமும் அப்புறப் படுத்தக் கூடியவர்களின் தொகை பெரிதும் சிறிது.

புதுவையில் வசிக்கும் 406 ஐரோப்பியர்களுக்கும், 1,136 ஐரோப்பிய இனத்தவர்களெனப்படும் பரங்கிக்காரர்களுக்கும், கிறிஸ்துவர்கள் இரண்டு மூன்று ஆயிர ஜனங்களுக்கும், இந்தியர்களில் மிகவும் சிலர்க்கும் மாத்திரம் இவ்வசதி ஏற்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஏனையர்கள் யாவருந் தாங்கள் வசிக்கும் வீடுகளின் கொல்லைப்புறத்தில் மலக்குழிகள் தோண்டுவித்து அக்குழிகளில் மலவிசர்ச்சனம் செய்துகொண்டு வருகின்றார்கள்.

இக்குழிகளில் சிற்சில வருஷமொருமுறை யிருமுறை சுத்தப்படுத்தப்படும். மற்றுச்சில மாமாங்கத்திற் கொருமுறையே அங்ஙனம் செய்யப்படும். வேறு சில மலக்கிடங்குகளில் தலைமுறை தலைமுறையாக மலக்குவியல்கள் சேமிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை யெல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டப்புகின் விரியுமென்றஞ்சி விடுத்தனம்.

அந்தோ! புதுவைக் கக்கவுஸ் ஆபாசத்தையும் அதனால் பொது ஜன சுகாதாரத்திற்கு ஏற்படும் கெடுதிகளையும் நினைக்க நினைக்க நெஞ்சம் புண்ணுகின்றது.

தென்னிந்தியாவிற்கு ஒரு மதாணிபோல் விளங்கும் நம் புதுவை மாநகர் மலக்குழிகளின்மீதன்றே அமர்ந்திருக்கின்றது!

இங்ஙனம் எடுப்பாரின்றிக் குவிந்து கிடக்கும் மலஜலங்கள் நானாவித நோய்கட்குக் காரணமாகின்ற விஷகிருமிகளுக்கெல்லாம் ஜனனஸ்தலமாகவும் உறைவிடமாகவும் இருக்கின்றதென்பதற்கு என்ன சந்தேகம்? இதனால் ஏற்படும் அபாயம் நகரவாசிகளில் சிலபாகத்தார்க்கு மாத்திரம் நேரிடக்கூடியதன்று. ஏனெனின், மலக்குழிகளில் உற்பத்தியாகும் விஷகிருமிகளும் கெட்ட ஆகாயமும் நிலப்பிளப்புகளின் வழியாய்க் கிளம்பிக் காற்றோடு கலந்து விஷசுரம், வசூரி, விஷபேதி முதலிய கொடிய வியாதிகளை நகரில் பலவிடங்களிலும் பரவச்செய்யும். அன்றியும், கிணறு, குளம் முதலியவைகளில் நீரோடு கலந்து அருந்தும் ஜலத்தைக் கெடுத்துப் பல வியாதிகளை யுண்டாக்கும்.

இவ்வாறு பதினாயிரக் கணக்கான ஜனங்கள் விஸர்ஜனம்செய்யும் மலாதிகள் நகரைவிட்டு அப்புறப்படுத்தப்படாததற்குக் காரணம், புதுவையில் சுத்தம்செய்பவர்கள் போதுமானவரையில் கிடையாத குறையே.

தோட்டிகளெனும் ஓர் கீழ் ஜாதியார் மாத்திரமே இவ்விடத்தில் இவ்வேலை செய்பவர்களாக விருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் மிகவும் சிலர். அரை லக்ஷம் ஜனத்தொகையுள்ள ஒரு பெரிய பட்டணத்திற்கு அவர்கள் தொகை போதியதன்று. அன்றியும் புதுவையில் சிற்சில வீடுகளுக்கு மாத்திரமே புழைக்கடை வாயிலுண்டு. மற்றப் பெருந்தொகை

யான வீடுகளெல்லாம் தெருவாயில் ஒன்று மாத்திரமே யுள்ளவை. தோட்டிகள் இவ்வாயில் வழியாகவே வீட்டின் பலபாகங்களிலும் சில சமயம் மடைப்பள்ளி யருகாகவுமே சுத்தம் செய்வதற்கு மலவறைகட்குப் போக வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

மிகவும் கீழ்ஜாதியர்களென எண்ணப்படும் இந்தத் தோட்டிகள் தங்கள் வீட்டிற்குள் பிரவேசிப்பதற்கு இந்துக்கள் சம்மதப்படுவதில்லை. இக்காரணத்தினாலேயே வீடுகளில் நாள்தோறும் சுத்தப்படுத்தக்கூடிய தான மலவறைகட்குப் பதிலாக மலக்குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்துக்களின் ஆசார வுணர்ச்சிகளுக் கிணங்கியே சென்னை முதலிய பெரிய நகரங்களின் முனிசிப்பல் அதிகாரிகள் வீடுகளில் மலவறைகளைச் சுத்தம் செய்வதற்குச் சகல வீட்டிற்குள்ளும் பிரவேசிக்கக்கூடிய வேறு ஜாதியார்களை அவ்வேலைக்கு நியமித்திருக்கிறார்கள்.

ஒட்டர்களென்னும் தெலுங்கு பேசுகின்ற ஒரு ஜாதியார் சென்னை, நாகை, நெல்லூர் முதலிய பட்டணங்களில் பெருந் தொகையானவர்களுண்டு. இவர்கள் இவ்வேலை செய்தற்கு அமைந்துள்ளவர்கள். இந்துக்கள் வீட்டிற்குள் இவர்கள் பிரவேசிப்பதற்கு ஆட்சேபமொன்றுமிராது. ஆண்பிள்ளைகளுக்கு மாதம் 7 ரூபாயாகவும் பெண்பிள்ளைகளுக்கு மாதம் 5 ரூபாயாகவும் ஆகிய சம்பளத்திற்கு இவர்கள் வேண்டியவரையில் கிடைக்கக்கூடியவர்கள்.

புதுவை முனிசிப்பா லதிகாரிகள் பொதுஜன சுகாதாரத்திற்கு மிகவும் முக்கியமான இவ்விஷயத்தில் தாமதியாமல் கவனித்து ஒட்டர்களில் 40, 50 பேர்களை, புதுவை மலவறைச் சுத்தத்திற்காக நியமிக்க வேண்டியது அத்தியாவசிகம். இதனால் ஏற்படக்கூடிய செலவு, மலவறைச் சுத்தத்திற்கென்று வீட்டிற்கு மாதம் 4 அணா மாத்திரமே வரியினால் முற்றும் ஈடுகட்டிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை.

சுகாதாரத்திற்கும் நகரச் சுத்தத்திற்கும் செய்யவேண்டியது இன்னொன்றுமுண்டு. முனிசிப்பால் குப்பைத்தொட்டிகள் தெருக்களிலின்மையால் வீட்டுக் குப்பைகளெல்லாம் வீதிகளில் பலவிடங்களிலும் கொட்டும்படி நேர்கின்றது. காற்று அவற்றைப் பலவிடங்களிலும் செலுத்தி நகரத்தை அசுத்தப்படுத்திவிடுகின்றது. சென்னை முதலிய பட்டணங்களிலிருப்பதுபோல நமது புதுவையிலும் வீதிகள் பலவிடங்களிலும் இரும்புத்தகட்டினால் செய்யப்பட்ட குப்பைத்தொட்டிகள் அமைக்கப்பட வேண்டியது அவசரம்.

**புதுவை நகர்வாசி.**

250



# ரமணி.

## ஓர் காதற் கதை.

### அத்தியாயம் 3.

(தொடர்ச்சி.)

'என்?' என்றான் ஜனார்த்தனன்.

"இந்தப் புத்தகம் ரமணியம்மாளுடையதாம். இதை அந்த அம்மாளிடம் கொடுக்கும்படி என்னைச் சாவித்திரியம்மாள் அனுப்பினார்கள்" என்றாள் பாலிகை.

"எங்கே கொடு பார்ப்போம்."

சாவித்திரி அகத்துப்பணிப் பெண் புத்தகத்தை ஜனார்த்தனன் கையிற் கொடுத்தாள்.

ஜனார்த்தனன் புத்தகத்தை விரித்தான். முதற்பக்கத்தின் தலைப்பில் 'சாவித்திரி' என்றெழுதப்பட்டிருந்ததைக் கண்டான். உடனே, புத்தகம் ரமணியுடையதல்ல, சாவித்திரிக்குத்தான் சொந்தம் என்றறிந்துகொண்டான். சாவித்திரி பொய்சொல்லி ஏன் இதை ரமணிக்கனுப்பினாளென் றெண்ணிக்கொண்டே புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பிக்கொண்டேயிருந்தான். அதிகாலையில் ரமணி காணாமற்போய்விட்டாளென்றறிந்தவுடனே அவனது நெஞ்சம் எவ்வாறு பதைத்ததோ அதற்குப் பன்மடங்கு வேகத்துடன் திடீரென இப்பொழுது அது துடிக்கலாயிற்று. ஏன்? புத்தகத்தின் எழுபத்தெட்டாம் பக்கத்திற்கும் எழுபத்தொன்பதாம் பக்கத்திற்கும் இடையிலிருந்த ஒரு கடிதக்கூடு (Envelope) திடீரென அவனது திருஷ்டியைக் கவர்ந்தது. அதன்மீது ஆங்கில பாஷையில் "ஸ்ரீமான் ஜனார்த்தனர்" என்றெழுதப்பட்டிருந்ததைக் கண்ணுற்றுவிட்டான். ஆகையால் உடனே புத்தகத்தை மூடிவிட்டான். ஓர் பெருத்த மனக்குழப்பத்தோடு, பேசவுஞ் சக்தியற்றவனாய், தான் செய்வ தின்னதென்பதையு மறியாமல் புத்தகங் கொணர்ந்த பணிப்பெண்ணையே சற்றுநேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தான். சிறுமி சற்று நாணித் தலை தாழ்த்திக்கொண்டாள். அப்பொழுதுதான் ஜனார்த்தனன் பிரமை நீங்கினான்.

"என் அமிர்தம்! ரமணியம்மாள் மாயமாய்க் காணாமற்போன விஷயம் இன்னும் சாவித்திரியம்மாளுக்குத் தெரியாதா?" என்று பதறுகின்ற குரலிற் பகர்ந்தனன்.

" என்ன! ரமணியம்மாளையா காணேம்! எங்கே போய்விட்டார்கள்! ஆ ஆ! இதென்ன மாயம்! " என வியப்புற்று விளம்பி அமிர்தம் பதுமையாக நின்றுவிட்டாள்.

ஜனார்த்தனன் உத்தாமொன்றும் உரைக்கவில்லை. அவன் என்ன பதில்தான் சொல்வான்! சிறிதுநேரம் மௌனமாய் நின்றனன். பின்பு அமிர்தம், " நான் பெரியம்மாளைக் கண்டு பேசிவிட்டுப் போகிறேன் " என்றனள்.

"அத்தையம்மாள் இருக்கிற சஞ்சலத்தில், இப்பொழுது நீ அவர்களோடு பேசுவதற்கு இது சமயமல்ல. நீ உடனே வீட்டுக்குத் திரும்பிப் போய் ரமணியம்மாள் விஷயத்தைப்பற்றிச் சாவித்திரியம்மாளுக்குச் சொல் போ, விரைவாய்ப் போ, வழியில் தாமதியாதே " எனச் சற்றுக் கடிந்து கழறினன் ஜனார்த்தனன்.

அக்கட்டளைப் பிரகாரம் அமிர்தமும் அகன்றுபோயினள். ஜனார்த்தனன் உட்சென்று மீண்டும் நாற்காலியி லமர்ந்தனன். புத்தகத்துள்ளிருந்த கடித உறையைக் கையிலெடுத்தான். மெல்லப் பிரித்தான். அதனுள்ளிருந்த கடிதத்தைப் பார்த்தான். நாற்புறத்தும் நோக்கினன். பின்பு மீண்டுங் கடிதத்தைப் பார்த்தான். அதில் பச்சை நிறத்தொடு சோபிதம் வாய்ந்து தெளிவுற விளங்கிய அக்ஷரங்களா லமைந்துள்ள விஷயத்தைப் பேராவலுடன் பருகலாயினன்.

முதன்முதல் அக்கடிதத்தில் " அன்புள்ள ஐய " என்றும் அதன் கீழ் " அருளுருவாகிய ஐய " என்றும் எழுதப்பட்டிருந்த இரு வரிகளும் இரண்டு கோடுகளால் அடிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு அடிக்கப்பட்டிருந்தபோதிலும் "அன்புள்ள ஐய" "அருளுருவாகிய ஐய" என்றமொழிகளைச் சுலபமாய் ஜனார்த்தனன் அறிந்துகொண்டான். அவ்விரு வரிகளுக்கும் கீழ் தோன்றிய ஐய எனப் பொருள்படும் 'Sir' என்ற ஆங்கில மொழியின்கீழ் எழுதப்பட்டிருந்த விஷயம் வருமாறு:

" உங்கள் ரமணி மாயமாய்க் காணமற்போன விஷயம் இப்பொழுதுதான் அறிந்தேன். அறிந்தது முதல் கொலைசெய்தவள் உள்ளம் போல் என் மனம் கலங்கித் தியங்குகின்றது. ஏனெனில், ரமணி காணமற்போனதற்குக் காரணம் நான்தான். நான் இன்னும் அதிகநாள் இவ்வுலகத்திலிரேனென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் என்னைப்பற்றி என்னவேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளுங்கள். உண்மையனைத்தையும் இப்போது உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். எப்படி வேண்டுமானாலும் என்னைச் சிக்ஷியுங்கள்.

2.

சென்ற ஆதிவாரம் என் நிச்சிதார்த்தம் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே. அந்தப்பாழ் நிச்சிதார்த்தத்திற்கு முந்திய இரவு ரமணியும் அம்மாளும் நானும் முற்கட்டிலிருக்கிற என் தகப்பனர் அறையில் படுத்துக்கொண்டோம். அம்மாள் தூங்கின பிறகு நான் என் துயரத்தையெல்லாம் ரமணிக்குச் சொல்லி அழுதேன். அவளும் அழுதாள். என் துயரமென்னவென்பீர்களோ அதையும் உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். சித்தங்கலங்கிச் சீக்கிரம் சாகப்போகிறவள் இனி என் நாணப்படவேண்டும். விஜயராங்கப் பெரிய கிழப் பிசாசிற்கு என்னைப் பலியிடத் தீர்மானித்திருப்பதுதான் என் துயரத்திற்குக் காரணம். நானும் ரமணியும் கொஞ்சநேரம் அழுதோம். பின்பு இருவரும் கண்ணைத் துடைத்துக்கொண்டு, பிசாசின் வசப்படாமல் நான் தப்பித்துக்கொள்வதற்கு உபாயமென்னவென்று நெடுநேரம் ஆலோசித்தோம். அந்தப் பிசாசின் பலிபீடத்துக்கு முன்பு நான் போவதற்கு முன்னமே என் இருதயம் வெடித்து நான் செத்துவிடுவேனென்று நான் சொன்னேன். அந்த ஒரு யோசனைதான் எனக்குத் தோன்றிற்று. ரமணியோ, என் துக்கத்தை உங்களுக்குத் தெரிவித்தால் அதை ஒழிப்பதற்கு நீங்கள்தான் ஒரு உபாயஞ் சொல்லுவீர்களென்று சொல்லிப் பின்பு “சாவித்திரீ! உன் நிச்சிதார்த்த தினத்திற்கு மறுநாள் திங்கட்கிழமை இரவு சுமார் பதினொரு மணிக்கு அதோ இருக்கிறதுபார் அந்த ஜன்னலுக்கப்பால் நின்று டக், டக், டக், என்று மூன்றுமுறை நான் அந்த ஜன்னலின்மீது தட்டுவேன். ‘யார்’ என்று நீ கேள். “நான்தான்” என்று நான் பதில்சொல்லுவேன். உடனே தெருப்புறத்துக் கதவைத் திறந்துகொண்டு நீ என்னோடுவா, நாமிருவரும் என் அத்தானிடம்போய் உன் பரிதாப ஸ்திதியை அவர்களுக்குத் தெரிவிப்போம். அவர்கள் ஏதேனும் உபாயஞ் சொல்லுவார்கள்” என்றாள். “நான் ஏன் வரவேண்டும்! நீயே உன் அத்தானிடம் என் சஞ்சலத்தைச் சொன்னாலென்ன” என்று நான் சொன்னேன். ஆனால் இருவரும் ஒன்றாகத்தான் உங்களைக் காணவேண்டுமென்று ரமணி வற்புறுத்தினாள். நானும் சம்மதித்துவிட்டேன். என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளுங்கள். சாகிறவளுக்குச் சமுத்திரம் முழங்கால்மட்டுந்தானே.

நேற்றிரவு சுமார் பன்னிரண்டரை மணிவரையில் நான் ஜன்னலருகேயிருந்து என் தோழியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தேன். ரமணி வரவில்லை. அவள் சற்று அமர்ந்தாலோசித்த பின்பு, தான் தனியே இரவில் வீட்டைவிட்டுச் செல்வது உசிதமல்லவென்றெண்ணிக்கொண்டு, வாராமல் வீட்டில் தங்கிவிட்டாள்போலும் என நினைத்து நான்

தூங்கப்போய்விட்டேன். ஆனால், இப்போதுதான் ரமணி காணாமற் போய்விட்டாளென்று கேள்வியுற்றேன். ஐயோ! எனக்காக ரமணி நேற்றிரவு வீட்டைவிட்டகன்று என் படுக்கை யறையின் ஜன்னலை நோக்கி வந்திருப்பாள். வழியில் அவளுக்கு என்ன விபத்து நேரிட்டதோ! எல்லாவற்றிற்கும் பாதகி சாவித்திரிதான் காரணம். ஆனால் ஒன்று மாத்திரம் சத்தியமாய்ச் சொல்லிவிடுகிறேன். நான் ஒரு தொண்ணூற்றொன்பது வயதுக் கிழவனை மணந்துகொண்டாற்றான் உங்கள் காதற்குரிய உங்கள் சொந்த ரமணி யாதொரு இன்னலுமின்றி மீண்டும் உங்களிடம் வந்து சேர்வாள் என்றால், அவ்விருத்த விவாஹத்தைச் செய்துகொள்ளவும் இப்பொழுது நான் சித்தமாயிருக்கிறேன்."

18 — 4 — 1899. சாவித்திரி.

கடிதத்தின் விஷயமனைத்தையும் அறிந்துகொண்டபின், அதை உறையிலிட்டு முன்போல் புத்தகத்தினுள் வைத்துவிட்டு ஆலோசனையிலாழ்ந்தனன் ஜனார்த்தனன். அவன் சிந்தையிற் சுழன்ற எண்ணங்களனைத்தையும் ஈண்டு விவரிக்கலாம். ஆனால் அர்த்தராத்திரிவரையில் ரமணியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சாவித்திரியின் மனம் சிந்தித்த விஷயங்களை விரிவாய் இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் கூறிவிட்டு இப்பொழுது ஜனார்த்தனனது எண்ணங்களையும் அவ்வாறே விவரிப்பின், நாம் வீணாய்க் கதையை வளர்த்துகிறோமென்று கதாநேயர்கள் எண்ணக்கூடும். ஆகையால் ஜனார்த்தனனது எண்ணங்கள் அவன் அகத்திலேயே அந்தரங்கமாகவிருக்க விட்டுவிடுவோம்.

ஜனார்த்தனனது எண்ணங்களுக்குக் காரணமாகிய கடிதத்தை எழுதிய சாவித்திரி அன்றிரவு தன் சயனத்தைத் தன் கண்ணீரால் நனைத்துக்கொண்டிருக்கும் பொழுது, சுமார் பதினொன்றரை மணிக்கு ஜன்னலுக்கப்பாலிருந்து டக், டக், டக், என்ற மூன்று தெளிவான சப்தங்கள் அவள் செவிகளிற் புகுந்தன. உடனே பதறி எழுந்து ஜன்னலருகே சென்று 'யார்?' என மெல்லக் கேட்டனள் சாவித்திரி.

( தொடரும். )

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

---

## ஈகை.

### ( கை விகுதிபெற்ற தொழிற்பெயர். )

ஈகையாவது வறியா ரேற்றார்க் கில்லையென்னுமலும், பிரதி பலனை விரும்பாமலும், அவர் வேண்டிய பொருளைத் தன்னா லியன்ற வளவு மகிழ்ச்சியொடு கொடுத்தல். "வறியார்க்கொன் றீவதே யீகை" என்று ஈகைக் கிலக்கணங் கூறியுள்ளார் தெய்வப்புலவர். "ஈ தா கொடு வெனு மூன்று முறையே யிழிந்தோ னொப்போன் மிக்கோனிரப்புரை" என்ற நன்னூற் சூத்திரத்தானும், ஈதல் தன்னினு மிழிந்தானென பொரு ளில்லானுக்கு அவனினு முயர்ந்தானென பொருளுடையான் ஒன்றைத் தானஞ்செய்தல் என்பது விளங்குதல் காண்க. ஈகையே அறத்திற் சிறந்ததாம். அதுபற்றியே "ஈத லறம்" என்றார் ஔவையார். அஃது உத்தமதானமென்றும் மத்திபதானமென்றும் அதமதானமென்றும் முத் திறப்படும்.

"என்னனு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னன் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னன் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே"

( கந்தபுராணம். )

உத்தமதானமாவது பிறன் தன்னை வேண்டுதற்குமுன் தன்னாற் செய்யக் கூடிய வுதவியைக் குறிப்பறிந்து செய்தல். மத்திபதானமாவது தன்னை வேண்டியவுடன் மறுக்காது செய்தல். அதமதானமாவது தன்னை வேண் டிய பின்பு பன்முறை மறுத்து இறுதியிற் செய்தல். இவற்றுள் உத்தம தானமே சிறப்புடைத்தாம். அதையும் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற வண்ணம் சற்பாத்திரங்களுக்கே கொடுத்தல் வேண்டும். சற்பாத் திர ரின்னாரென்பதை,

"மாண்புடை யாளர் கேண்மையர் தத்தம்
வழிமுறை யொழுக்கினி லமர்ந்தோர்
சேண்படு நிரப்பி னெய்தினோர் புரப்போர்
தீர்ந்தவர் தந்தைதாய் குரவர்
தாண்டரு முதவி புரிந்துளோ ரினையோ
ரொன்பதின் மருமுளங் களிப்ப
வேண்டுறு நிதிய மளிப்பின்மற் றென்றே
கோடியா மெனமறை விளம்பும்"

( காசி காண்டம். )

என்றதனுலறிக. இங்ஙனமல்லாத அபாத்திரரான தீவினையாளர்க்குப் பொருள் கொடுப்பி னப்பொருள் தீய வழியிற் செல்லுதல் பற்றிக் கொடுத்தலரையுந் தீவினையின்பாற் படுத்துமென்க. தீவினையாள ரின்னு ரென்பதை,

" முகனெதி ரொன்றும் பிரியின்மற் றொன்று
மொழிபவர் விழைவுறு தூதர்
அகன்றகேள் வியிலா ரருமருத் துவர்க
ளரும்பொருள் கவருநர் தூர்த்தர்
புகலருந் தீமை புரிபவர் மல்லர்
செருக்கினர் புன்றொழிற் றீயோர்
இகழ்தரு வினையோ ரொன்பது பெயர்க்கு
மீந்திடல் பழுதென விசைப்பார் "

( காசி காண்டம். )

என்றதிற் காண்க. இங்ஙனமாகிய அபாத்திர மொழித்துச் சற்பாத்திரத் திற் கீவதாற் போந்த பயன் யாதோவெனின், கூறுதும்: நைமிசாரணி யத்தில் முனிவர் பல ரொருங்குகூடிச் சிவபிரானைக் காணு முபாயம் யாதென் றாராய்ந்துழி, தவமும், சத்தியமும், யாகமும், துறவும் முதலாக ஒவ்வொரு காரணத்தை ஒவ்வொருவர் தம் கருத்தாகக் கூறுகையில், கௌதம மகா முனிவர் அதற்குச் சிறந்த வுபாயம் தானமேயென்று தம் கருத்தை,

" கொடையேயெவர்க்குமெப்பேறுங் கொடுக்குநெறியிற்பிறழாத
கொடையேயாருந்தன்வழியி னொழுகச்செய்யுங்குறைதீர்ந்த
கொடையேபகையையுறவாக்குங் குலவும்பூதமனைத்தினையுங்
கொடையேபுரக்குமென்றுள்ளங் கொள்ளப்புகன்றான்கௌதமனே"

( காஞ்சிப்புராணம். )

வெளியிட்டருளினமையான் அதன் பயனறியக் கிடக்கும். தவிர,

" சாதல்வந் தடுத்த காலுந் தனக்கொரு சாத லின்றிப்
பூதல மிருக்குங் காறும் புகழுடம் பிருக்கு மந்தக்
கோதறு புகழின் யாக்கை கொடையினாற் செல்வங் கூடா
வாழ்தலை யுடையா ரன்றே வானமும் வணங்கு சீரார் "

( விநாயக புராணம் ) என்றதனுலும்,

" வீந்தவரென்பவர் வீந்தவரேனும்
ஈந்தவரல்ல திருந்தவர்யாரே "

( கம்பராமாயணம். )

என்றதனாலும், பஞ்சபூதங்களாகிய உடம்பொருவனுக் கழியினும் கொடையாலாம் புகழழியாது நிற்குமென்பதும், அக்கொடையால் மறுமை யின்பம் அடைவனென்பது தேற்றமாகலின் தேவனாய்ப்பிறந்து தேவசரீரத்தா லவ்வுலகத்தையும் புகழுடம்பா லிவ்வுலகத்தையு மொருங்கே யடைவனென்பதும், புண்ணியத்தா லவ்வுலகத்தைமட்டிலடைந்துள்ள தேவர்களினுஞ் சிறந்து அவர்கள் வணங்கத்தக்கவ னாவனென்பதும் பெறப்படும்.

அன்றியும் தானத்தை உலகப்பயன் கருதாது கடவுளின் கருணையையே பயனாகக் கருதி ( நிஷ்காமியமாக )ச் செய்யின் அது முத்தி பெறுதற்கும் மூலமாம்.

இதன் சிறப்பை யறிந்த பெரியோர் கொடுத்தற்கரிய தம் உயிருறுப்புப் பொருள்களையுமன்றோ வழங்கினர். இது, ததீசிமுனிவர், சிபிசக்ரவர்த்தி, கர்ணன் முதலியோர் சரித்திரங்களான் விளங்குவதாம். இவ்வீகைக் குணமுடையாரே வள்ளல் என்றழைக்கப்படுவர்.

அங்ஙன மீயாதவர் உலோபிகளெனப்படுவர். செல்வத்தை யீட்டி வைத்து அதனைத் தானுகர்தலும் பிறர்க் கீதலுமில்லாதவன் பிழைத்திருக்கையில் அச் செல்வத்தினிடத்துத் தான் செய்யக்கிடந்ததோர் உரிமையைச் செய்யாது, இறந்தபின் அச் செல்வத்தினிடத்தவனாற் செய்யக் கிடந்ததோ ருரிமை யில்லாமற் போவதுபோல, இருந்து மிறந்தவனுக் கொப்பாகின்றான். "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்ற ஔவையாரின் அமுதமொழி யிரட்டுற மொழிதலால் " கொடாத லோபிகள் செல்வத்தைக் கொடியோர் கைப்பற்றுவர் " என உபமேயமாகவும் "ஈக்கள் தேடிவைத்த தேனைத் தீக்கோலையுடைய வேடர் கவர்வர்" என உபமானமாகவும் இரு பொருள்படுதலால் உலோபிகள் செல்வம் உத்தம வழியின்பாற்படாது தீய வழியின் பாற்படுமென்ப தொருதலை. உலோபிகள் முற்பிறப்பி னல்வினையால் செல்வத்தைப் பெற்றும், அதனைத் தாமு மனுபவியாமல் பிறர்க்கு மீயாமல் நாய்க்குத் தெங்கம்பழம் கிடைப்பின் வீண்படுத்துவதுபோல் வீண்படுத்துவர். இவ்வுலோபிகளைப் பட்டினத் தடிகள்,

" நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுக்
தாயார் வயிற்றி னரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
ஈயா மனிதரை யேன்படைத் தாய்க்ச்சி யேகம்பனே "

என்றிழித்துக் கூறியுள்ளார்.

ஈகைக் குணமுடையாரையும் உலோபிகளையும் ஒரு நிகராக மனிதரென்று வழங்குதல் சிறப்பினதாகிய சுவர்ணத்தையும் சிறப்பில தாகிய இரும்பையும் ஒரு நிகராகப் பொன்னென்று வழங்குதல்போலாம். எனவே ஈயாரை மனிதரென்றற்குத் தகுதியின்மை யென்க. அன்றியும்,

"ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை"

(திருக்குறள்.)

ஆகின்றனர். ஆகையின் யாவரும்,

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு"

(திருக்குறள்.)

என்ற வமுத மொழியைக் கடைப்பிடித்து, எஞ்ஞான்றும் பிறர்க்குத் தம்மாலான வுதவியைச் செய்து சிறப்படைவார்களாக.

இதுவரையிற் கூறிப் போந்த துணையானே ஈகையென்பது வறியார்க் களித்தலென்பதூஉம், அதுவும் உத்தமம் மத்திமம் அதமம் என முத்திறப்படுமென்பதூஉம், அவையி லுத்தமதானமே சிறப்புடைத் தென்பதூஉம், அதையும் சற்பாத்திரத்திற் களிக்கவேண்டுமென்பதூஉம், அதனாற் பெறும் பயன் மறுமை யின்பமும் பிறவுமென்பதூஉம், ஈயாத வுலோபிகளிருந்து மிறந்தவ ராவதன்றிப் பூமிக்குப் பாரமாவரென்பதூஉம் பிறவும் பெறப்பட்டன.

N. சொக்கலிங்கசெட்டியார்
பரங்கிப்பேட்டை.

---

## புராதன நகரமாகிய தக்ஷசீலம்.

ஆர்க்கியாலெஜிகல் உத்தியோகஸ்தர்கள் ஓர் பெரிய விஷயத்தைக் கண்டுபிடிக்குந்தறுவாயி லிருக்கிறார்கள். பஞ்சாப் மாகாணத்தி லுள்ள ராவல்பிண்டி என்ற இராணுவஸ்தலத்திற்குச் சமீபத்தில் தக்ஷசீலத்தின் அழிந்துபோன அடையாளங்களிருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். புராதன பட்டணமாகிய தக்ஷசீலம் ஹிந்துதேச சரித்திரத்தின் பூர்வ பாகத்தில் மிகப் பிரசித்திபெற்றது. ஐந்து நதிகள் பாய்வதால் 'பஞ்சநதி' எனப் பெயர்பெற்ற பஞ்சாப் மாகாணத்தினூடே அதிபராக்கிரமசாலியான மகா அலெக்சாந்தர் என்ற கிரீக் அரசன் படையெடுத்துச்

சென்றபோது விந்து ஜீலம் என்ற நதிகளுக்கிடையே தக்ஷசீலத்தை ஓர் பெரிய பட்டணமாகவிருக்கக்கண்டான். அலெக்சாந்தர் வரவைக்கண்ட தக்ஷசீலத்தின் அரசன் பயந்து அவனுக்குக் கீழ்ப்படிந்து கப்பங்கட்டுஞ் சிற்றரசனுனன். அலெக்சாந்தர் காலத்துக்கு 200 வருஷங்களுக்கு முந்தியே ஏற்பட்டுள்ள ஓரிராஜ்யத்தின் தலைமை நகரமாகமாத்திர மல்லாமல் தக்ஷசீலம் ஓர் பேர்பெற்ற வித்தியாஸ்தலமாகவு மிருந்தது. அக்காலத்தில் பெறுவதற்குரிய எவ்வகையான அறிவையுமடைய வித்தியார்த்திகள் நாலுதிசைகளினின்றும் தக்ஷசீலத்தை நாடிக் குவியல்குவியலாகச் சென்றனர்.

தக்ஷசீலம் என்பதற்கு தக்ஷகர்களுடைய இடம் என்று அர்த்தம். இவர்கள் கிறீஸ்துவுக்கு 600 வருஷங்களுக்குமுன் வட இந்தியாவில் குடியேறிய சித்தியர்களோடு சம்பந்தப்பட்டவர்கள். இந்தச் சித்திய தக்ஷகர்களையே ஸர்ப்ப ஜாதிக்கு மூல புருஷர்களெனக் கருதுகிறார்கள். இவர்களுக்கு நாகர்கள் என்றும் பெயருண்டு. 'நாக' 'தக்ஷக' என்ற பதங்களுக்குச் சம்ஸ்கிருத பாஷையில் ஸர்ப்பம் என்று அர்த்தம். சித்திர வேலையிலும், சிற்பவேலையிலும் நாம் அடிக்கடி காண்கிற இந்த தக்ஷகர்கள் அல்லது நாகர்கள் இந்தியாவில் பழையகாலத்தில் மரங்களையும் பாம்புகளையும் வணங்கினவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

அலெக்சாந்தர் காலத்துக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு தக்ஷசீலம் அசோக சக்ரவர்த்தியால் பிடிக்கப்பட்டு இராஜதானியாக்கப்பட்டது. இந்தியாவில் ஐந்தாவது ஏழாவது நூற்றாண்டுகளில் முறையே யாத்திரைசெய்த 'பாஹியான்' 'ஹியூன்ஸான்' என்ற இரண்டு சீனர்களும் தக்ஷசீலத்தைப் பெரிய பௌத்த ஸ்தலமெனச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பிறகு சரித்திரத்தில் இந்நகரத்தைப் பற்றி அதிக பிரஸ்தாபமில்லை.

பிராசீன இந்திய சரித்திரத்தில் இப்படிப்பட்ட மகிமையுடைய தாய்க் கீர்த்திபெற்று விளங்கின தக்ஷசீலநகரம் எந்த ஸ்தானத்திலிருந்திருக்கலாமென்பதை யோசித்தறிவதே பண்டிதர்களுக்குப் பெரியகாரியமா யிருந்துவருகிறது.

ராவல்பிண்டிக்கு 46 மைல் தென்மேற்கில் 'ஷாதெரி' அல்லது 'தெரிஷஹான்' என்ற கிராமத்திற்குச் சமீபத்திலுள்ள 'ராஜாமேடு' என்றவிடத்தில் அது இருந்திருக்கவேண்டுமென, காலஞ்சென்ற சர் அலெக்சாந்தர் கன்னிங்ஹாம் எண்ணினர். அங்கே விஸ்தாரமான அழிந்த அடையாளங்களிருக்கின்றனவாதலின் அவர் சொல்லியது சரியென்றே

ஒத்துக்கொள்ளப்பட்டிருந்தது ஆனால் இப்போது அவர் சொல்லியது பிசகெனக் காண்கிறது. இப்போது ஆர்க்கியாலெஜிகல் டிபார்ட்மெண்டின் (உத்தியோகத்தின்) முக்கிய அதிகாரியாகிய மார்ஷல் என்பவர் ஷாதெரிக்கு 50 மைலுக்கப்பாலுள்ள அழிவு அடையாளங்களைத் தோண்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்த இடத்திற்கு 'செரைகாலா' என்று பெயர். ராவல் பிண்டிக்கு வடமேற்கில் கொஞ்சதூரத்திலிருக்கிற இந்த இடத்தில்தான் தக்ஷசிலம் இருக்கவேண்டுமென உத்தேசிக்கப்படுகிறது.

சிறிது காலத்துக்குமுன் திபேத்து தேசத்துப் பௌத்த சந்நியாசிகள் இதே இடத்தை மிகுதியும் ஏறின விலைகொடுத்து வாங்கப் பிரயத்தனப்பட்டதே இப்போது நடக்கும் பரிசோதனைக்கு முக்கிய ஹேதுவாம். தக்ஷசீல நகரம் இவ்விடத்திலிருந்ததாகச் சொல்லுகிற சில பழைய பௌத்த சாதனங்களை அவர்கள் வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்பட்டார்கள். தக்ஷசிலம் கண்டுபிடிக்கப்பட்டால் 2,500 வருஷங்களுக்கு முன்னே வட இந்தியாவின் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகலாம்.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்,
கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்,
முத்தியாலுப்பேட்டை, புதுவை.

---

# இலக்கியப் பகுதி.

## மணிமேகலை.

### உதையகுமாரன் அம்பலம் புக்க காதை.

(பதினெட்டாவது மணிமேகலை அம்பலமடைந்தமை சித்திராபதி உதையகுமாரனுக்குச் சொல்ல அவன் அம்பலம் புக்க பாட்டு.)

(தொடர்ச்சி.)

86 - 97. சித்திரா பதிதான் சிறுநகை யெய்தி
யத்திறம் விடுவா யரசிளங் குரிசில்

காமக் கள்ளாட் டிடைமயக் குற்றன
தேவர்க் காயினுஞ் சிலவோ செப்பின்
மாதவன் மடந்தைக்கு வருந்துதுய ரெய்தி
யாயிரஞ் செங்க ணமரர்கோன் பெற்றது
மேருக் குன்றத் தூருநீர்ச் சரவணத்
தருந்திறன் முனிவர்க் காரணங் காகிய
பெரும்பெயர்ப் பெண்டிர் பின்புளம் போக்கிய
வங்கி மனையா ளவரவர் வடிவாய்த்
தங்கா வேட்கை தனையவ டணித்ததூஉங்
கேட்டு மறிதியோ வாட்டிறற் குரிசில்

இ—ள். சித்திராபதியானவள் புன்னகைசெய்து, உதையகுமரனை நோக்கி, "அரசிளங்குமரனே! அத்தன்மையை விடுவாயாக; காமமாகிய களியாட்டினிடத்து மயங்கிச்செய்த செய்திகள் சொல்லுமிடத்துச் சிலவோ! பலவுள்ளன; கௌதமன் மனைவியாகிய அகல்யைக்கு வருந்துதற்குரிய துன்பமுண்டாக, தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரன் ஆயிரங் கண் பெற்றதையும், இமயமலையினிடத்துப் பரந்த நீரையுடைய சரவணப் பொய்கையில் அரிய வல்லமையையுடைய சப்தரிஷிகளது அரிய தெய்வத்தன்மை வாய்ந்த பெரிய புகழையுடைய மனைவியரிடத்து மனதைப் போக்கிய அக்கினிதேவனை, அவனது மனைவியாகிய ஸ்வாகாதேவியானவள், அவ்வம் முனிபத்தினிகள் வடிவங்கொண்டு சேர்ந்து, அவனது மிகுந்த விருப்பத்தைத் தணியச்செய்ததையும் கேட்டும் அறிவாயோ? வாட்போரில் வல்ல அரசனே!

அத்திறம் விடுவாய் — 'அங்கவடன் றிறமயர்ப்பாய்' என்று நின் கனவிற்றோன்றிய ஒருத்திகூறிய அதனை விடுவாயாக. உதையகுமானுக்குத் துணிவு பிறத்தற்பொருட்டு, இந்திரன் அகல்யையை விரும்பியது முதலியவற்றைச் சித்திராபதி கூறினள்.

இந்திரன் கௌதமமுனிவர் மனைவியாகிய அகல்யையை விரும்பிச் சேர்ந்து அம்முனிவர் சாபத்தால் ஆயிரங்கண் பெற்றானென்பதும் அகல்யை கல்லாகி வருந்தினளென்பதும் புராணகதை. மேருக்குன்றம் — இமயமலை; இமயம் மலையரையனாதலின் மற்ற மலைகளின் தொழில்களையும் பெயர்களையும் அதற்கேற்றிக் கூறுதல் நூன்மரபு. சரவணம் — தருப்பைக் காட்டினையுடையதொரு பொய்கை.

முன்னொருகாலத்தில் அக்கினிதேவன் சப்தரிஷிகளுடைய மனைவிகளை விரும்பி அச்சந்தாபம் பொறுக்கமாட்டாமல் காட்டுக்குப் போன

பொழுது அவன் எண்ணத்தையறிந்த ஸ்வாகாதேவி அம்முனிவரெழுவர் மனைவிகளுள் அருந்ததி யொழிந்தோருடைய வடிவத்தை முறையே யெடுத்து வேறுவேறு காலங்களிற் சேர்ந்து அவன் வேட்கையைத் தணித்தாளென்று ஸ்ரீ வியாச பாரதத்துள்ள ஆரணியபர்வத்தில் 224, 225, 226-ம் அத்தியாயங்களால் தெரிகின்றது.

98 - 111. கன்னிக் காவலுங் கடியிற் காவலுந்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலு
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்தங் குடியிற் பிறந்தா ளல்ல
ளாடவர் காண நல்லரங் கேறி
யாடலும் பாடலு மழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சங் கொண்டகம் புக்குப்
பண்டேர் மொழியிற் பயன்பல வாங்கி
வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரைப்
பான்மையிற் பிணித்துப் படிற்றுரை யடக்குதல்
கோன்முறை யன்றோ குமரற் கென்றலும்

இ - ள். கன்னிப்பருவத்திற் காவலையும், கலியாணத்தின் பின் காவலையும், தன்னுடைய கணவன் இறந்தபின்னர்க் காவலையும் தமது கற்பினாலே காத்து, அயலாரைப் பாராமல், கணவனையன்றித் தெய்வத்தையும் விரும்பி வழிபடாத குலமகளிர்தங் குடியிற் பிறந்தவளல்லள் நம் மணிமேகலை; பின் என்னெனின், நாட்டிலுள்ளவர் காணும்படி ஆடுமிடத்திற்சென்று, கூத்தும் பாட்டும் அழகுமாகிய இவற்றைப் புலப்படுத்தி, வண்டொழுங்காகிய நாணையுடைய கரும்பு வில்லினால் மன்மதன் மலர்க்கணை சொரிய, போர்புரிகின்ற கயல்போன்ற நெடிய கண்களாகிய சுருக்கு வலையில் அகப்படுத்திக்கொண்டு, பார்த்தவர்களது மனங்களைக் கவர்ந்து தம் வீட்டிற் புகுந்து, இசைப்பாட்டையொத்த சொற்களால் பொருள் அணிகலம் ஆடை முதலிய பல பயன்களைப்பெற்று, பசையற்ற காலை, தேனைக்கொண்டு மலரைத்துறக்கும் வண்டுபோல் விட்டு நீங்கிப் போகின்ற பொருள்கொள்ளுதலையுடைய பரத்தையரைத் தகுதியாற் கட்டி அவர்களது பொய்வார்த்தையை யடக்குதல் இராஜகுமாரனாகிய உனக்குச் செங்கோன்முறையல்லவோ " என்று கூறினள்.

கடி – கலியாணம். நிறை – நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல். "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பேதலை" என்று வருதல் காண்க. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழு வாள்" என்ற திருக்குறளிற்போல, "கொண்டோனல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர்" என்றார். நல்லரங்கு – எழுகோலகலத்தினையும் எண்கோல் நீளத்தினையும் ஒருகோல் குறட்டுயரத்தினையும் வாய்தலிரண்டினையுமுடைய அரங்கு. சுருப்பு–சுரும்பு; வண்டு. அருப்புக்கணை–மொட்டருமலராகிய அம்பு. அருப்பு – அரும்பு; விகாரம். சுருக்குவலை – ஒருவகை வலை. வண்டு – பரத்தையர்க்குவமை. கொண்டி – கொள்ளுதல்; கொள்ளையுமாம்.

112 – 127. உதைய குமர னுள்ளம் பிறழ்ந்து
விரைபரி நெடுந்தேர் மேற்சென் றேறி
யாயிழை யிருந்த வம்பல மெய்திக்
காடமர் செல்வி கடிப்பசி களைய
வோடுகைக் கொண்டுநின் றாட்டுநள் போலத்
தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்துப்
பாத்திர மேந்திய பாவையைக் காண்டலு
மிடங்கழி காமமோ டடங்கா னாகி
யுடம்போ டென்ற னுள்ளகம் புகுந்தெ
னெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள்வி
நோற்றூண் வாழ்க்கையி னொசிதவந் தாங்கி
யேற்றூண் விரும்பிய காரண மென்னெனத்
தானே தமிய ணின்றோண் முன்னர்
யானே கேட்ட லியல்பெனச் சென்று
நல்லா யென்கொ னற்றவம் புரிந்தது
சொல்லா யென்று துணிந்துடன் கேட்ப

இ–ள். அங்ஙனம் சித்திராபதி கூறுதலும், உதயகுமரன் மனம் வேறுபட்டு, விரைந்து செல்கின்ற குதிரைகள் பூட்டிய பெரிய தேர்மேலேறிச் சென்று, மணிமேகலை யிருக்கும் உலகவறவியை யடைந்து, பேய்களின் பசியைத் தவிர்த்தற்பொருட்டு ஓடு கையிற்கொண்டு ஊட்டுகின்றவளாகிய துர்க்கையைப்போல, பாத்திரத்தைக் கையிற்றாங்கி, கொடிய பசியையுடைய மனிதர்கட்குச் செழிய சோறிடுகின்ற பதுமைபோல்பவளான மணிமேகலையைக் கண்டவுடன், வரம்பின்றிப்பெருகிய காமத்தோடு அடங்காதவனாய், என் உடம்பிலும் உள்ளத்திலும் புகுந்து

263 245



என் மனதைக்கவர்ந்த வஞ்சகத்தையுடைய திருடியாகிய மணிமேகலை விரதங்களாற் பட்டினிவிட்டுண்ணும் வாழ்க்கையினையுடைய நுண்ணிய தவத்தை மேற்கொண்டு இரந்துண்ணும் உணவை விரும்பிய காரணம் என்னவெனத் தனிமையளாய் நிற்கின்ற இவளை நானே கேட்குதல் தகுதியென்று அவள் முன்னர்ச்சென்று மணிமேகலையை நோக்கி, " பெண்ணே! நீ இத்தவம்புரிகின்றது யாதுகாரணம்? சொல்வாயாக " என்று துணிந்து கேட்டனனென்க.

விரைபரி—வினைத்தொகை. காடமர்செல்வி—துர்க்கை. கடி-பேய். வாழ்க்கை — தவத்திற்கு அடை.

( வரும். )

பத்திராதிபர்.

---

## சாத்திரப் பகுதி.

### மங்கலம்.

(தொடர்ச்சி.)

எஞ்ஞான்று வரையானென்னும் கிளர்ச்சி யெழுகின்றதோ அஞ்ஞான்றளவு அரந்தையே அயில்வதாகும். அஃதில்லா தொழியினோ அனவரத மயில்வ தருஞ் சுகமேயாகும். ஆதலின் அகங்காரத்தை யணுவுமில்லா தொழித்தலே மேன்மை. எத்துணை யகங்காரக்கொண்மூ நாற்புறமும் கிளம்புகின்றதோ அத்துணை யவா மல்லிகைப்பூ மஞ்சரியலரா நிற்கும். (ஞானசூரியனை யாவரித்தலின் அகங்காரம் எழிலியாம்) அகங்காரச் சலதர மழியுமாயின் ஆசைமின்னற்கொடி யணைந்த தீபச்சுடர் போல அதிவிரைவி லோரிடம் புக்கொழியும். மேகங் கர்ச்சிப்பதொப்ப அகங்காரமா மரும்பெரும் விந்தியகிரிமாட்டுளமாங் கடக்கரி யுந்தப் போருச்சாகத்தோ டுலவாநிற்கும். ( வணக்கமும் சலனமும் அற்றிருத்தலின் அகங்காரம் விந்தியாசலத்திற் கொப்பாகியதெனக் கொள்ளக் கிடந்தது. ) ஆகப்பெருவனத்தே அதிதிட அகங்கார அரியானது கருவ சேஷ்டைகளோடுகூடி விருத்தியுற்று விளங்குகின்றமையின் இவ்வுலகம் அற மற வடிவ விரைகளால் விஸ்தரிக்கப்படுகின்றதென்ப. அகங்கார ஒட்டலனால் தந்திர மந்திரமின்றியே புத்திர மித்திர களத்திராதிரூப வசீகரண வுபாயம் இயற்றப்பட் டிலங்குகின்றது. யானென்னும் சொல்

லும் வேரோடு தூக்கப்பட் டழியுமாயின் அகத்தின்பாலுற்ற அகில துஷ்ட ஆமயங்களும் அக்கணமே யழிந்தொழியு மென்றறிக. சாந்தியை மாந் தும் யானென்னும் ஜீமூதம் நாளடைவிற் கழிந்தொழியின் மனவிண்ணி னண்ணும் மோகமா மிமக்குழுச் சென்றவிடமுந் தெரியுங் கொல்லோ! (அகங்காரம் பையக்கழிதல் நம்போலிய மந்தர்க்கென்க) அகங்காரத் தொழில்களையணுகாதெறிந்தும் மௌட்டியத்தால் மகாதுயருறும் மட மை மிகுந்த நம்போலியருக்குத் தகுதியாய உபதேசமும் ஒன்றுண்டு கொல்! ஆபத்துக்கெல்லா மரண்மனையாயும், நிலையற்றதாயும், அகத்திற் குடிகொண்டதாயும், சாந்திமுன்னும் சற்குணங்களாற் சாடத்தக்கதாயும், எப்புறத்தும் அஞரையே பயப்பதாயும் நிலவும் அகங்காரத்தை யடியோடும் விடப் பிரகிருத மங்கலத்தை யெய்தற்பாலதற் கருங் கருவியேயாய பிரஹ்மாத்ம தத்துவப் பெருந்திட விவேகமன்றிப் பிறிதொன்றுளதோ.

(இன்னும் வரும்.)

வீர. சு.

---

## நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

36. பிஷ்டபேஷண நியாயம்: — பிஷ்டம் – அரைத்தமா, பே ஷணம் – அரைத்தல், நியாயம் – திருஷ்டாந்தம். இது செய்ததையே செய்துகொண்டிருத்த லிதுபோலவென்கின்றது. அதாவது: அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருத்தல்போல வென்பதாம்.

37. இலாங்கலி விருக்ஷ நியாயம்:—இலாங்கலி விருக்ஷம்–தென்னை மரம், நியாயம் – திருஷ்டாந்தம். இது அதி பிரயத்தனத்தால் பலன் றருவ திதுபோலவென்கின்றது. அதாவது: தென்னையானது தன்கீழ் நின்று கரம் நீட்டலானும், வளை தடி (சொரடு) முதலிய ஆயுத விசே ஷத்தானும் பலனைத் தாரா திருப்பதுமன்றித் தன்மீதிவர்ந்துளாரும் பிறி தோர் ஆயுதத்தானேயே தன் பயனை நுகர்தற்கு யோக்கியமாயிருத்தல் போல வென்பதாம்.

38. கதலீ பல நியாயம்: — கதலீ பலம் – வாழைக்கனி, நியா யம் – திருஷ்டாந்தம். இது விவேகிகளாகிய சற்சனர், காரியப்பொருட் டுத் துர்ச்சனர்களைச் சார்ந்திருந்தாரேனும், தம் சற்குணத்திற் றிரியாராத

விதுபோல வென்கின்றது. அதாவது: வாழைக்கனியானது வேம்பி னிலையுளிருந்து கனியினும் தன் இனிய சுவை மாறாததுபோல வென்பதாம்.

39. ஹிமப் பிரபாகர நியாயம்:—ஹிமம்-பனி, பிரபாகரன்—சூரியன், நியாயம் – திருஷ்டாந்தம். இது தூர்ச்சனச் சார்பால் நேர்ந்த துர்க்குணங்கள், சற்சன சகவாசத்தின் முதிர்ச்சியால் நீங்க விதுபோல வென்கின்றது. அதாவது: திருணாதிகளில் பொருந்திய பனிப்பற்றானது சூர்ய கிரண முதிர்வால் நீங்கல்போல வென்பதாம்.

40. லோஹாங்க்த குந்த நியாயம்: — லோஹாங்க்த குந்தம் – பஞ்சலோஹங்களி லொன்றாகிய இரும்பினை அந்தத்தி (முனையி)லேயுடைய கைவேல், (ஈட்டி) நியாயம் – திருஷ்டாந்தம். இது வலியுளானை முன் வைத்துக் காரியஞ்செய்த விதுபோலவென்கின்றது. அதாவது: கைவேலானது தன் முற்பாகத்துள்ள இரும்பினால் காரியஞ் செய்தல்போல வென்பதாம்.

41. உடுப நியாயம்: — } இவையிரண்டும் (34) தர்வீபாகரச நியாயம்போன்றனவேயாம்.
42. நிஸ்ரேணி நியாயம்: — }

உடுபம் – தெப்பம். நிஸ்ரேணி – ஏணி.

( இன்னும் வரும். )

அநந்தபத்மநாபஸ்வாமி

காஞ்சீபுரம்.

---

## சுஜன சம்வாதம்.

### ஒரு நல்ல கப்பல்.

( முன் தொடர்ச்சி. )

**கோற்றன்.** அன்ப, கேட்பாயாக.

" பொன்றுவ துடம்பதனு ளின்றபொருள் பொன்றா
தென்றமொ ரியற்கையொடு நிற்குமியல் பைக்கேள்
முன்றொடர் மகப்பருவம் விட்டிளமை மூப்போ
டொன்றுமுட லாயினு முயிர்க்கியல்ப தன்றால். "

" அன்னவகை யாலுரு வழிந்துவரு மாங்கே
யென்னுருவ மாமறி விறந்துபிற வாதாற்

பின்னைதறி வானுட லழிந்துபிரி போதுந்
தன்னதென வேதமொர் சலிப்பதறி யானல். "
என்ற பகவான் வசனம் பிரமாணமாம்.

சாத்தன். ஐய, தாம் என்னை யொரு கப்பலிலிருப்பதாகக் கூறினீர்க என்றீரே! அஃதியாது?

கொற்றன். அன்ப, இந்த உன் சரீரமே என்னால் சொல்லப்பட்ட கப்பலாகும்.

சாத்தன். இதற்குப் பெரியார் வாக்கியமிருந்தால் கூறுக.

கொற்றன். "மானுட யாக்கை யென்னு மருவருந் தோணி பெற்றும்
ஊனமில் குரவன் சொல்லா மோடமுய்ப் பவனே டென்சீர்
ஆனதோ ரனுகூ லக்கா லனுகவும் பிறவி வேலை
தாஞெழி தரவெண் ணுதோன் றன்னையே கொல்கின் [ ஞனும்"
என்னும் பாகவத வசனங்கள் பிரமாணங்கள்.

சாத்தன். ஐய, இப்பிறவியைக் கடலென்றதில் வேறு பிரமாணங்களுமுண்டானால் கேட்க விரும்புகின்றேன்.

கொற்றன். "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா ரிறைவ னடிசேராதார்" என்ற செக்காப்போதார் வசனத்தாலும் இன்னும் பல பிரமாணங்களாலும் அறியலாகும்.

சாத்தன். ஐயனே, இந்தத் தங்களுடைய அத்யற்புத சல்லாபரூப சதுபதேசமானது, என்னைப் பல ஐயப்பாட்டினின்றும் தெளிவித்தது. இத்தகைய பேருபகாரத்தைச் செய்த தங்கட்கு யான் செய்யும் நன்றியறிந்த நமஸ்காரத்தை யங்கீகரிக்கக் கோருகின்றேன்.

கொற்றன். அன்ப, ஈதென்ன புதுமை! நண்பர்க ளிருவர்கூடி உண்மை வார்த்தைகளைப் பேசிக்கொள்வதில் ஒருவர்க்கொருவர் உபசாரஞ் சொல்லிக்கொள்வது யாதுக்கு? நல்லது அன்பனே, நாம் வந்து வெகு நாழிகையாய்விட்டது போவோம் வருவாய்.

( இருவர்களும் தங்க ளிருப்பிடம் போகின்றார்கள். )

ஆ. செங்கல்வராயமுதலியார்.

காஞ்சிபுரம்.

# வைத்தியக் குறிப்பு.

---

சோரிசிறங்கு:—இதனால் துன்பப்படுகிறவர்கள் போதுமான தேங்காய்க் கீற்றை நெருப்பிற்போட்டுச் சுட்டெடுத்து அத்துடன் கொஞ்சம் மிளகையும் நீலத்துத்தத்தையுஞ் சேர்த்து மைபோலரைத்து, சிறங்குள்ள விடங்களிற் பூசி சாயங்காலம் இலுப்பைப் பிண்ணாக்கைத் தேய்த்துக் குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானஞ்செய்துவர, 4, 5 நாளைக்குள் உபத்திரவம் நீங்கிச் சுகந்தரும்.

பின்னுமொருவிதம்:— ஈயச் செந்தூரம், சூடம், மிருதார்சிங்கி இவைகளைச்சமனிடையாகநிறுத்துப் பொடித்துத் தேங்காயெண்ணெயிற் குழப்பிச் சிறங்குகளுக்குப் பூசி, சாயங்காலம் இலுப்பைப் பிண்ணாக்கைத் தேய்த்துக் குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானஞ்செய்துவரத் தீரும்.

கடிவிஷம்:—இந்த ரணங்களுக்குப் பிரதமத்தில் நதிகளிலாவது குளங்களிலாவது அலை யடிப்பினால் கரைகளி லொதுங்கி யிருக்கின்ற பூமணலைக் கொண்டுவந்து கிளிக்கட்டியெடுத்த கட்டித் தயிரைவிட்டு மைபோலரைத்து ஓர் பீங்கானில் வைத்துக்கொண்டு 4 அல்லது 5 நாள் வரை கடிவிஷப் புண்களுக்குத் தடவிவர, அதிலுள்ள துர்நீர்களெல்லாம் அகன்றுபோம். அப்பால் காலணா ஈயவெள்ளையில் ஒரு பைசா கற்பூரத்தைப் பொடித்துப் போட்டு, போதுமான தேங்காயெண்ணெயைவிட்டுக் குழைத்து ஷை ரணங்களுக்குக் காலையும் மாலையும் சோப்புப்போட்டுச் சுத்தமாய்க் கழுவித் தடவிவரத் தீரும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லே. முனிசிபல் கௌன்சிலா
பழநிஸ்தலம்.

---

## சமாசாரம்.

---

### ஒரு நவீன யந்திரம்.

இத்தாலிய இஞ்சினீயர் ஒருவரால் புகைப்படமெடுப்பதுபோன்ற ஒரு யந்திரம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த யந்திரத்தை வீடுகளின் வாயிற்கெதிரே கட்டிவைத்தால் அவ்வாயிற் கதவைத் திறப்பவர்களுடைய உருவங்களெல்லாம் அந்த யந்திரத்திற் பதிந்துவிடு

மாம். எவ்வளவுபேர் வீட்டிற் புகுந்தாலும் அவர்களது உருவங்களைப் பதிவுசெய்துகொள்ளும் சக்தி அதில் அமைத்துள்ளதாம். அதன் பெயர் கிளெப்டோகிராப்பாம். இது திருடர்களைக் கண்டுபிடிக்கப் பெருதவியாயிருக்கும்.

---

## ஓர் ஆகாய விமான விபத்து.

ஜர்மனி கப்பற்படையின் உதவியின்பொருட்டுச் செய்யப்பட்ட ஒரு ஆகாயவிமானம் ஆயிரமடி உயரத்திலிருந்து கீழேவிழுந்தது. அதிலேறியிருந்த 30 பேர்களும் இறந்துபோயினராம். மேற்படி விமானம் ஆகாயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் அதில் 3 வெடிசத்தம் கேட்டதாம். உடனே விமானம் பற்றிக்கொண்டு கீழேவிழுந்து துகளாகப் போயிற்றும். நாகரிகம் வளரவளர விபத்துக்களும் கூடவே வளர்கின்றன.

---

## விதவைகளின் தொகை.

ஜன கணித அறிவிப்பின்படி சென்னை ராஜதானியில் மட்டும் ஐந்து வயதுக்குட்பட்ட விதவைகள் 6,078. இவர்களுள் 31 பேர் ஒரு வயதுகூட ஆகாத குழந்தைகளாம். 5 வயது முதல் 10 வயது வரையுமுள்ள விதவைகள் 1,072 என்றும் 10 முதல் 15 வயது வரையுமுள்ள விதவைகள் 18,223 என்றும் மொத்தத்தில் 15 வயதுக்குட்பட்ட விதவைகளின் தொகை 23,068 என்றும் தெரிகிறது. பால விவாகம் செய்யும் புத்திமான்கள் இதனைப் பெரிதும் கவனிப்பாராக.

---

## ஒரு சாவிக்காரனது மோசம்.

கும்பகோணம் மகாமகக்குளத்தின் மேற்குக்கரையில் வசிக்கும் ஒரு ஸ்திரீ தனது பெட்டிக்குச் சாவிபோட ஒரு சாவிக்காரனை யழைத்து வந்தனள். அவன் சாவி சரிப்படாமைபோன்று பாசாங்குசெய்து, எண்ணெய் கொண்டுவரும்படி சொன்னான். அந்த ஸ்திரீ எண்ணெய் கொண்டுவரப்போனபோது அவன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த 90 ரூபாயையும் 10 ரூபாய் நோட்டையும் எடுத்துக்கொண்டு அந்த ஸ்திரீ வந்தவுடன் கொஞ்சநேரம் சாவி போடுவதுபோலப் பாசாங்கு செய்து வேறு சாவி கொண்டுவருகிறேன் என்று போய்விட்டானும்.

---

பல கண்காக்ஷிகளில் மெடல்கள்பெற்ற
அபூர்வ ஒளஷதங்கள்.

# பி. சுப்பருய், ஆயுர்வேத
ஒ ள ஷ த சா லை,
ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள்கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு
வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஒளஷதங்கள்

41. **நாக்குப்பூச்சி மருந்து.** — குடலிலுள்ள எல்லாவித கிருமிகளையும் வெளியாக்கி, நாக்குப்பூச்சிகளால் உண்டாகும் எல்லாவித பாதைகளையும் நிவாரணஞ்செய்யும். தேக ஆரோக்கியத்தைத் தரும். நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால், அடிவயிற்றில் கனம், பசியின்மை, அபரிமிதமான பசியைப்போல் தோற்றல், சாப்பிட்டபின் வயிற்றுநோய், வயிற்றுபோக்கு, வாய்நாற்றம், வாந்தி, வெருட்டல், சுரம், தலைவலி, மூக்கிலும் ஆசனத்திலும் அரிப்பு, வாயில் உமிழ்நீர் ஊரல், நாக்கு இழுத்துக்கொள்ளல், சில சமயம் மலச்சிக்கல், சில சமயம் மலக்கழிச்சல் முதலிய பற்பல நோய்கள் நாக்குப்பூச்சிகளால் உண்டாவதை இம் மருந்து முற்றிலும் குணமாக்கும். விலை சீசா 1-க்கு அணு 10. 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

42. **ஓமம் வாட்டர்.** — இது சாதாரணமாய் கடைகளில் பெரிய சீசாக்களில் விற்கும் ஓமம் வாட்டரல்ல. எம்மால் தயார்செய்த ஷை ஓமம் வாட்டர் ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது. இதைத் துளிகள் கணக்காகவே உபயோகித்தால் போதுமானது. இச்சிறு சீசாவிலுள்ளதை 24 அவுன்சு சுத்த ஜலத்துடன் கலந்துசொண்டால், கடைகளில் விற்கும் ஓமம் வாட்டரைவிட சிறந்த ஓமம் வாட்டரைத்தரும். வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமாந்தம், அஜீர்ணபேதி இவைகளுக்குக் கொடுத்தால் சவுக்கியமாகும். ஜீர்ண சக்தியை அதிகரிக்கும். காலரா என்னும் வாந்திபேதி ரோகத்திற்கு இதைக் கொடுத்து தகுந்த குணத்தை கண்டதுண்டு. விலை சீசா 1-க்கு அணு 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

2 7 0



43. நறைமயிர் கறுக்க சாயம். — இதன் சீசாவுடன் சுற்றிவரும் டைரக்ஷனில் கண்டபடி உபயோகித்தால் நறைத்த மயிரும் செம்பட்டை மயிரும் நறைப்பதற்கு முன்னிருந்த கருப்பு நிறத்தையும் பளபளப்பையும் அடையும். இதை உபயோகித்தால் முகலட்சணமும் வசீகரமுமுண்டாவதுமன்றியும், கிழவர்களை வாலிபர்களைப்போல தோற்றச்செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா 1. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

44. லக்ஷ்மீவிலாச தைலம். — மிகவும் வாசனையுள்ள தைலம். தலைமயிர், கண் புருவம், மீசை, தாடி மெத்த செழிப்பாகவும், கருப்பாகவும், நெருக்கமாகவும் வளரச்செய்யும். இதன் இன்பமான சுகந்தம் இத்தைலத்தை உபயோகிக்கிறவர்களைச் சுற்றிக்கொண்டே நெடுநேரம் வீசும். மூளைக் கொதிப்பைப்போக்கி, சித்தபிரமை, தலைமயக்கம், புத்திமந்தம், நித்திரையில்லாமை முதலியவைகளைப் போக்கும். விலை சீசா 1-க்கு அணா 12. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

## 45 அதிஉன்னத வாசனை திரவியங்கள் முதலானவைகளின் விலை விபர ஜாபிதா.

---

உயர்ந்த கோரோஜனை தோலா 1-க்கு ரூபா 8. உயர்ந்த பச்சை கற்பூரம் தோலா 1-க்கு ரூபா 2. உயர்ந்த குங்குமப்பூ தோலா 1-க்கு ரூபா 2. வி. பி. செலவு பிரத்தியேகம்.

உசிதமான அத்தர் தினுசுகள். — ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ, மகிழம்பூ, விளாமிச்சம்வேர், மருக்கொழுந்து, தாழம்பூ, மருதனைப்பூ, சுவாக் முதலிய புஷ்பங்களின் முதல்தரமான அத்தர் வகைக்கு தோலா 1-க்கு கிரயம் ரூபா 1-8-0. வி. பி. செலவு பிரத்தியேகம்.

P. SUBBAROY,
AYURVEDIC PHARMACY,
*Sri Venkatesa Perumal Koil Sannathy,*
TANJORE.

---

*N. B.* — என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.